# வேளாண்மை அறிவியல் நிலையம், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்
















**தா்பூசணி,  முலாம் பழம் மற்றும் மிளகாய்  பழச்சாகுபடியில் சாதனை படைத்த  திரு.மனோகரன்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயா் | : | **திரு. ம. மனோகரன்**<br> |
| 2. | தந்தையின் பெயா் | : | திரு. மாணிக்கம் |
| 3. | பாலினம் | : | ஆண் |
| 4. | முகவரி | : | வேப்பேரி கிராமம்<br>மரக்காணம் ஒன்றியம் |
| 5. | தொலைப்பேசி எண், மின் அஞ்சல் விவரம் | : | 9659545785 |
| 6. | நிலம், நீா் சொத்து விவரங்கள் | : | நன்செய் நிலம் :- 2 ஏக்கா், புன்செய் நிலம் : 3 ஏக்கா், திறந்தவெளி கிணறு , 1, 7.5 எச்.பி மோட்டாா் |
| 7. | செயல்படுத்திய தொழில்நுட்ப பகிா்மானம் | : | நான் ஒரு பட்டதாரி விவசாயி. எனது பாரம்பரியத் தொழிலில் கரும்பு, நெல் உற்பத்தி செய்து வந்தேன். எங்களது பகுதியில் காய்கறி சாகுபடிக்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளது என்பதனை திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள், சக உழவா்கள் வாயிலாக அறிந்து கொண்டேன். எனவே தோட்டக்கலைப்பயிா்களில் புதிய ஈா்ப்பு ஏற்பட்டது. எனது வயலில் துல்லியப்பண்ணைய முறையில், நுண்ணீா்ப்பாசனம், நிலப்போா்வை, உயா் விளைச்சல் தரும் காய்கறிப்பயிா்கள் சாகுபடிக்கு என்னை முழுமையாகத் தயாா் செய்து கொண்டேன். திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் வழிகாட்டுதல், நேரடி கண்காணிப்பு, பல்வேறு நிலைய, வெளி வளாகப் பயிற்சிகள், பல்கலைக்கழகத்தின் கருத்தரங்குகள், கண்காட்சிகளில் கலந்து கொண்டு தொழில் நுட்பங்களை சீாிய முறையில் கடைபிடித்தேன். தா்பூசணி, முலாம்பழம், பழச்சாகுபடியிலும், மிளகாய், உற்பத்தியிலும் நல்ல முறையில் முயற்சிகள் மேற் கொண்டேன். ஆண்டுதோறும் உற்பத்தி, உற்பத்தி இலக்கினை அடைதல், சந்தைப்படுத்துதல் என்ற மூன்று கோட்பாடுகளுடன் 2010-13 ல் இயங்கினேன். |

| | | | |
|---|---|---|---|
| 8 | விளைவு | : | இன்று எனது வயல் தோட்டக்கலைப்பயிர்களில் மற்றவர்களுக்கு உதாரணமாகத் திகழ்கின்றது. பல்வேறு பயிர்கள் சாகுபடி முழு அளவில் ஆண்டுதோறும் செய்வதால் என்னைப் பார்த்து மற்ற உழவர்கள் நல்ல பயிர் சுழற்சி முறையினைப் பின்பற்றுகின்றனர். எனது தோட்டத்தில் நிலப்போர்வையுடன் சொட்டுநீர்ப்பாசனமுறைகளாலும், ஒருங்கிணைந்த நிர்வாக முறைகளாலும் இடுபொருள், மனித ஆற்றல் உபயோகம் செம்மைபடுத்தப்பட்டது. இரு ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்த நான், இன்று சாதனை விவசாயி என மாறியுள்ளேன். மேலும், எனது வயலில் தொழில்நுட்ப முறைகளால் ஆண்டுக்கு எனது இலாபம் நான்கு இலட்சமாக உயர்ந்தது. தர்பூசணியில் ஏக்கருக்கு அதிக பட்சமாக 21.0 டன்களும், முலாம் பழத்தில் 22.5 டன்களும், பச்சை மிளகாயில் 6.0 டன்களும் (½ ஏக்கர்) சராசரியாக விளைச்சல் எடுக்க முடிந்தது. இவை அனைத்தையும் தங்கு தடையின்றி சந்தைப்படுத்தி தரமான வேளாண் பொருட்களுக்கு நல்ல வரவேற்பு உண்டு என்ற அனுபவப் பாடத்தினைக் கற்றுக் கொண்டேன். ஒட்டு மொத்தமாக வேளாண்மையில் முன்னர் கொண்டிருந்த பார்வை மாறி, தற்பொழுது விழுப்புரம் மாவட்ட உழவர்களுக்கு ஆலோசனை வழங்கக் கூடிய வகையில் தெளிவும், அனுபவமும் பெற்றுள்ளேன். |
| 9. | விவசாயிடம் கற்று கொண்ட அனுபவங்கள் | : | • தோட்டக்கலையில் ஆர்வமுள்ள உழவர்களுக்கு தொடர் பயிற்சிகள், பகுதிக்கு ஏற்ப சாகுபடி முறைகள், சந்தைக்கேற்ப உற்பத்தி ஆகியவற்றை உகந்த வகையில் செயல்படுத்தியதால் அதிக இலாபம் கிடைக்கின்றது எனக் கண்டறியப்பட்டது.<br>• நீர்ப்பற்றாக்குறையுள்ள பகுதியில் சொட்டுநீர்ப் பாசன முறை அதிக பரப்பில் சாகுபடி செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.<br>• குறுகியகாலப் பயிர்களில் அதிக இலாபம் கிடைக்கின்றது. சரியான அணுகுமுறைகளால் உழவர்கள் - விஞ்ஞானிகளின் தொழில்நுட்ப பகிர்மானமும் மற்றும் பரவலாக்கமும் நடைபெற்றது.<br>• உழவர்கள் குழு முறையில் இயங்குவதற்கும் எதிர்காலத்திட்டங்களை வகுப்பதற்கும் வழிவகைகள் ஏற்பட்டுள்ளன. |

.

**கசப்பான கரும்பு சாகுபடியை இனிமையாக மாற்றிய திரு. பூராசாமி**

| | | | |
|---|---|---|---|
| 1. | விவசாயின் பெயர் | : | **திரு. பெ.பூராசாமி**  |
| 2. | தந்தையின் பெயர் | : | திரு. பெருமாள் |
| 3. | பாலினம் | : | ஆண் |
| 4. | முகவரி | : | பேரங்கியூர் கிராமம்<br>திருவெண்ணைநெல்லூர் ஒன்றியம்<br>விழுப்புரம் |
| 5. | தொலைப்பேசி எண் மற்றும் மின் அஞ்சல் விபரம் | : | 8098940441 / 9944740330 |
| 6. | நிலம் மற்றும் நீர் சொத்து விபரங்கள' | : | நன்செய் நிலம் - 5 ஏக்கர் ; புன்செய் -7 ஏக்கர், |
| 7. | விவசாயி செயல்படுத்திய தொழில்நுட்ப பகிர்மானம் | : | நான் கரும்பு சாகுபடியில் சுமார் 28 வருடம் அனுபவம் பெற்றவன். நீடித்த நவீன கரும்பு சாகுபடியில் நிலத்தடி சொட்டுநீர்ப் பாசனத்தின் மூலம கோ.க 24 கரும்பு இரகத்தில் ஒற்றை பரு நாற்றினைக் கொண்டு நடவுசெய்து அதிக மகசூல் ஈட்டினேன். நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையில் குறைந்தளவு நாற்றுக்கள் செலவு, தண்ணீர் தேவையும் குறைந்தது. இதன் மூலம் சொட்டுநீர் பாசனத்தில் நன்கு அனுபவம் பெற்றேன். நீரில் கரையும் உரங்களை சொட்டு நீர்ப் பாசன முறையுடன் இணைத்து உர நிர்வாகம் செய்தேன். இம்முறை சுலபமான நடவு, இயந்திரமாக்குதலுக்கு வழிவகுத்தது. மேலும், ஊடுபயிராக உளுந்து சாகுபடி செய்தேன். இது மட்டுமல்லாமல் குருத்து புழு, இடைக்கணுப் புழு தாக்குதலுக்கு உரிய மேலாண்மை முறைகளைக் கடைபிடித்தேன். தோகையை எரிக்காமல் |

| | | | |
|---|---|---|---|
| | | | இயந்திரத்தைக் கொண்டு பொடியாக்கி அதே வயலில் பரப்பினேன். இது தவிர பரிந்துரைக்கப்பட்ட பல்வேறு முறைகளைக் கடைபிடித்தேன். |
| 8 | விளைவு | : | இச்சாகுபடி முறையில் ஏக்கருக்கு 106.854 டன் என்ற அளவில் மொத்தம் 224.395 டன்கள், 2.10 ஏக்கரில் மகசூல் எடுத்தேன். ஒரு எக்டர் பரப்பளவில் 267.135 டன்கள் என்ற அளவில் எனது வயலில் விளைச்சல் என்பது மாநில அதிகாரிகள், விஞ்ஞானிகளால் உறுதிபடுத்தப்பட்டது.<br>இரட்டிப்பு மகசூலால் நிகர வருமானம் கூடியது. அது மட்டுமல்லாமல் உற்பத்தி செலவும் குறைவானது. இது தவிர உளுந்து ஊடுபயிர் சாகுபடிமூலம் ஏக்கருக்கு ரூ.13,500/- நிகர வருமானம் கிட்டியது. ஊடுபயிர் சாகுபடி, கரும்பு தோகை மட்க வைக்கும் முறைகளால் மண்வளம் கூடி மறுதாம்பு பயிர் ஊக்கத்துடன் வளர்வது காணமுடிகின்றது. நிலத்தை நமது மாநிலம் மட்டுமல்லாமல் ஆந்திரா, மகாராஷ்டிரம், உத்திரபிரதேஷ், கர்நாடகா, போன்ற மாநிலங்களிலுள்ள சர்க்கரை ஆலை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பார்வையிட்டு பாராட்டினார்கள். |
| 9. | விவசாயிடம் கற்று கொண்ட அனுபவங்கள் | : | இச்சாதனை விவசாயின் அனுபவத்தினால் ‘நீடித்த நவீன கரும்பு சாகுபடி’, உழவர்களால் எளிதில் பின்பற்ற கூடிய முறை முறை என அறியப்பட்டது. உற்பத்தி, உற்பத்தித்திறனை உயர்த்துவதன் மூலம் வருவாய் அதிகம் கிடைக்கின்றது. ஊடுபயிரின் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கின்றது. கரும்புத் தோகையைப் பொடி செய்து நிலப் போர்வையாக்குதல் மண், நீர் வளம் மேம்படுத்தப்பட்டதால் மற்றவர் பின்பற்ற ஒரு சிறந்த அணுகுமுறையாக நீடித்த ‘நவீன கரும்பு சாகுபடி’ திகழத் தொடங்கியுள்ளது. இச்சாதனைக்குறியீடு சராசரிக் குறியீடாக மாறும் காலம் மிக அருகாமையில்தான் உள்ளது என இந்த அனுபவம் அனைவருக்கும் கற்றுத் தந்துள்ளது. |

**காளான் வளர்ப்பின் மூலம் இலாபகரமான தொழில் முனைவோரான திரு.அக்பர்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | **திரு. ப.அக்பர்**<br> |
| 2. | தந்தையின் பெயர் | : | திரு. பஷிர் |
| 3. | பாலினம் | : | ஆண் |
| 4. | முகவரி | : | 12 /3 பூதன்சகிப் தெரு<br>திண்டிவனம் |
| 5. | தொலைப்பேசி எண், மின் அஞ்சல் விவரம் | : | 9659545785 |
| 6. | நிலம், நீர் சொத்து விபரங்கள் | : | நிலம் இல்லை, முன்னர் ஊர்தி ஓட்டுனர் |
| 7. | செயல்படுத்திய தொழில்நுட்ப பகிர்மானம் | : | திண்டிவனத்தில் 2008 ஆம் வருடம் வரை நான் ஒரு சராசரி ஊர்தி ஓட்டுனராக இருந்தேன். வாழ்க்கையில் முன்னேற்றம் பெற உபதொழில்களைத் தேடியலைந்த எனக்கு திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையம் காளான் வளர்ப்பில் அறிமுகப் பயிற்சி வழங்கியது. அடுத்தடுத்து பல பயிற்சிகள், கண்டுணர் சுற்றுலாக்கள், கருத்தரங்குகள் என மூன்று வருடங்களில் என்னை முழு தொழில் முனைவோராக அறிவியல் நிலையம் தயார்படுத்தியது. இதன் மூலம் நான் மூன்று வருடங்களில் காளான் உற்பத்தி, காளான் வித்து உற்பத்தி, மதிப்புக்கூட்டப்பட்ட காளான் பொருட்களில் அனுபவம், நிபுணத்துவம் பெற்றேன். இதில் உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள் கையாளுதலில், என்னைச் சார்ந்த ‘பிஸ்மி காளான் உற்பத்தியாளர் சங்க’ உறுப்பினர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றோம். இத்தொழில் நான் பால்காளான், சிப்பிக்காளான் உற்பத்தி, அதில் பல்வேறு தயார்நிலை மற்றும் பொடி வகைகள் தயாரிப்பில் விழுப்புரம் மாவட்டத்தில் முன்னோடியாகத் திகழ வாய்ப்பளித்துள்ளது. கற்ற அனைத்து தொழில்நுட்பங்களையும் எங்களது குழு உறுப்பினர்கள் சரியாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம். எனது தொழிலில் கண்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | வெற்றியினை சக உழவர்கள், கல்லூரி மாணவ, மாணவியர் அனைவருக்கும் விலையில்லா முறையில் கற்றுத் தருகின்றேன். நான் இன்று தொழில் முனைவோராக மாறி எனது ஆட்டோ தொழிலை விட்டுவிட்டு காளான் மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருள் தயாரிப்பு தொழில் முனைவோராக பணியாற்றி வருகின்றேன். |
| 8 | விளைவு | : | காளான் சாகுபடியில் மாதம் 35,000 ரூபாய் சாதரணமாக கிடைக்கின்றது. நாள்தோறும் 40-50 கிலோ வரை காளான் உற்பத்தி, மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி நிலை எட்டப்பட்டது. இத்தொழில் விரிவாக்கத்திற்கு ஏற்ற நிலத்தினையும் தற்பொழுது வாங்க முயற்சி மேற்கொண்டுள்ளேன். காளான் விற்பனை செய்ய எந்த இடைத்தரகர்களையும் சாராமல் நானே நேரடித் தொழில் முனைவோராகச் செயல்படுகின்றேன். காளான் உற்பத்தி, மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் வியாபாரம் சமுதாயத்தின் கீழ்த்தட்டு மக்களும் அங்கீகரிக்கும் தொழிலாக எனது பகுதியில் மாறியுள்ள என் குழு உறுப்பினர்களுக்கு வருவாய் கிடைக்கக் கூடிய தொழிலாக காளான் உற்பத்தி கைகொடுத்துள்ளது. இது மட்டுமில்லாமல் எனக்கு தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம் ‘சிறந்த தொழில் முனைவோர்’ என்ற கௌரவத்தினை அளித்துள்ளது. |
| 9. | விவசாயிடமிருந்து கற்று கொண்ட அனுபவங்கள் | : | காளான் உற்பத்தி சமுதாயத்தின் எளியவர்களும் பின்பற்றக்கூடிய தொழிலாகும். காளான் சாகுபடியில் தனித்தன்மை வாய்ந்த மதிப்பூட்ட பொருட்களை உற்பத்தி, நேரடி வணிகம் கிராமப்புறத்தில் சமச்சீர் உணவில் முக்கிய பொருளாக மாறியுள்ளது. இதுபோன்ற சிறு தொழில் முனைவோர்களுக்கு வங்கிகள் கடனுதவி அளிப்பதன் மூலம் தற்சார்பு அடைய வாய்ப்புள்ளது. கிராமத்திலிருந்து நகரங்களுக்கு செல்லும் தோட்டக்கலைப் பொருட்களுக்கு உள்ள மதிப்பு காளானுக்கு உண்டு என கண்டயறியப்பட்டது. |